**இந்தியத் துணைத் தூதரகம்**

**யாழ்ப்பாணம்**

**<u>ஊடக அறிக்கை</u>**

யாழ் இந்தியத் துணைத் தூதரகத்தின் 216,000 ரூபாய் நிதி அன்பளிப்புடன் முது தமிழ்ப் புலவர் ஔவையாரின் நினைவாக வவுனியா தேசியக் கல்வியற் கல்லூரியினர் நடாத்திய தமிழ் பண்பாட்டு விழா கல்லூரியின் பல நோக்குக் கூட்டுறவு மண்டபத்தில் இன்று (24 மார்ச் 2019) சிறப்பாக இடம்பெற்றது. காலை 09.00 மணிக்கு ஆரம்பிக்கப்பட்ட நிகழ்வுகள் யாவும் மதியம் 1.00 மணியுடன் நிறைவுற்றது.

தேசிய கல்வியற் கல்லூரி பீடாதிபதி திரு சுவர்ணராஜ் அவர்கள் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் யாழ் இந்தியத் துணைத் தூதுவர் பாலச்சந்திரன் அவர்கள் பிரதம விருந்தினராக கலந்து கொண்டார். மேலும் சிறப்பு விருந்தினர்கள், உபபீடாதிபதிகள், விரிவுரை இணைப்பாளர்கள், சிரேஷ்ட விரிவுரையாளர்கள், விரிவுரையாளர்கள், பதிவாளர், கல்வி சாரா பணியாளர்கள் மற்றும் ஆசிரிய மாணவர்கள் உள்ளிட்ட 200ற்கும் மேற்பட்டவர்கள் நிகழ்வில் கலந்து கொண்டனர்.

ஔவையாரின் திருவுருவப் படத்திற்கு யாழ் இந்தியத் துணைத் தூதுவர் மலர்மாலை அணிவித்து மரியாதை செலுத்தி நிகழ்வினை தொடக்கி வைத்தார். ஆசிரிய மாணவர்களினால் கூத்து, இசை நாடகம், நாட்டிய நாடகம், நடன நிகழ்வுகள், இசை நிகழ்வுகள், வீணை இசை, தவில் நாதஸ்வர இசை என தமிழரின் கலை மற்றும் பாரம்பரியத்தினை வெளிப்படுத்தும் பல்வேறு சிறப்பு நிகழ்வுகள் மேடையேற்றப்பட்டதுடன் பங்குபற்றிய மாணவர்களுக்கு சான்றிதழ்களும் வழங்கி கௌரவிக்கப்பட்டது. நிகழ்வில் சிறப்புரையாற்றிய யாழ் இந்தியத் துணைத் தூதுவர் தனது உரையில் இந் நிகழ்வானது அருகி வரும் தமிழர் கலை வடிவங்களிற்குப் புத்துயிர் அளிக்கும் முகமாக அமைந்திருந்ததாகவும் நிகழ்வின் பெயரானது நிகழ்விற்கு மிகவும் பொருத்தப்பாடு உடையதாக விளங்கியதாகவும் குறிப்பிட்டதுடன் இது போன்ற தமிழர் கலைகளை வளர்க்கும் நிகழ்வுகளைத் தொடர்ந்தும் வவுனியா தேசிய கல்வியற் கல்லூரியினர் நடாத்த வேண்டுமெனக் கேட்டுக் கொண்டதுடன் அதற்கு யாழ் இந்தியத் துணைத் தூதரகம் தனது பங்களிப்பினை வழங்குமென்று குறிப்பிட்டிருந்தார்.

விழாவுடன் தொடர்புடைய புகைப்படங்கள் இதனுடன் இணைக்கப்பட்டுள்ளது.

***

மார்ச் 24, 2019

**Consulate General of India**
**Jaffna**
****

# PRESS RELEASE

## Tamil Cultural show at Vavuniya

With a grant-in-aid of LKR 216,000 given by the Consulate General of India in Jaffna, the Vavuniya National College of Education organized a cultural function in commemoration of the Tamil poet 'Avvaiyaar' on 24th March (Sunday) from 9 am to 1 pm at their auditorium.

The College Principal Mr.Swarnaraj presided over the function. Consul General Balachandran was the Chief Guest. Over 200 students including Vice-Principals, Lecturers, special guests and non-academic staff participated in the function. Consul General Balachandran inaugurated the function with the garlanding of the portrait of 'Avvaiyaar' and also addressed the gathering. The function included song, dance and drama performances by students and teachers, who also received certificates of appreciation.

Representative photos are enclosed.

****

March 24, 2019.